0245

# Vitdu

# வித்து

மாணவர் சஞ்சிகை    மாதம் இருமுறை இதழ்

## இதழ்




## ஜூன்

"பார்க்க படிக்க பாதுகாக்க"

விலை ரூபா 20/=

வெளியீடு:-
"செலக்ஷன்" நூல் வெளியீட்டுக்குழு
(யாழ்ப்பாணம் கொழும்பு - 06

# ஸ்ரீ வல்லிபுரா போட்டோ



வர்ண புகைப்படச்சுருள் பிரதியாக்கல்
புகைப்படத்துறை பொருட்கள் விநியோகம்

புலோலி T.P 070 - 212720

## ஒளியருவி வீடியோ & போட்டோ

- வீடியோ படப்பிடிப்பு
- புகைப்படப் பிடிப்பு
- மணப்பந்தல் சேவை
- அல்பம் தயாரித்தல்



நல்லூர் T.P 021 - 2604

**ஸ்ரீவல்லிபுரா போட்டோ**

காரியாலயம்

குருவிச்சாணெல்லை
புலோலி தெற்கு,
புலோலி

கிளை

545, பருத்தித்துறை வீதி,
நல்லூர்

**ஒளியருவி வீடியோ & போட்டோ**

காரியாலயம்

154 முருகேசர் லேன்
முத்திரைச்சந்தி, நல்லூர்

கிளை

பருத்தித்துறை வீதி,
நீர்வேலிச்சந்தி,
நீர்வேலி.

## தமிழில் மூன்று

| | | |
|---|---|---|
| முத்தமிழ் | → | இயல், இசை, நாடகம் |
| முந்நூல் | → | முதல், வழி, சார்பு |
| முக்காலம் | → | இறந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் |
| மூவிடம் | → | தன்மை, முன்னிலை, படர்க்கை |
| முச்சங்கம் | → | முதல், இடை, கடை |
| முப்பா | → | தாழிசை, துறை, விருத்தம் |
| மூவெழுத்து | → | வல்லினம், மெல்லினம், இடையினம் |
| முத்தொழில் | → | ஆக்கல், அழித்தல், அருளல் |
| மூவேந்தர் | → | சேரன், சோழன், பாண்டியன் |
| மூவினம் | → | ஆண், பெண், அலி |
| முந்நீர் | → | கடல், ஊற்று, மழை |
| மூவாசிரியர் | → | உ.ஆசிரியர், நூ.ஆசிரியர், போ.ஆசிரியர் |
| முக்கருவி | → | தோல், துளை, நரம்பு |
| முக்காரணம் | → | முதல், துணை, நிமித்தம் |
| முக்கனி | → | மா, பலா, வாழை |
| முச்சுடர் | → | சூரியன், சந்திரன், அக்கினி |
| முச்சுவை | → | இனச்சுவை, அவலச்சுவை, வீரச்சுவை |
| முத்தியாகம் | → | உடல், பொருள், ஆவி |
| முவ்வளவு | → | தொகை, வகை, விரி |
| முந்நிலை | → | கேவலம், மெத்தம், முத்தம் |
| முஞ்ஞானம் | → | பாசஞானம், பசுஞானம், பதிஞானம் |
| முக்குணம் | → | சத்துவம், இராசகம், தாமசம் |
| முச்சொல் | → | மெய், புகழ், பழி |
| மூவாசை | → | மண், பெண், பொன் |
| முக்கற்பு | → | அறக்கற்பு, மறக்கற்பு, இறைகற்பு |

எழுதியது
-மாஸ்ரர்-

***************


## சூரியன் பதில்கள்

அன்புடன் மாணவ மாணவிகளே!

" சூரியன்" கேள்வி பதில் பகுதிக்கு கேள்விகளை கேட்க விரும்பின் அரசியல், சினிமா தவிர்ந்த ஏனைய கேள்விகளைக் நீங்கள் கேட்கலாம். உங்களுக்கு சூரியன்பதில்கள் மகிழ்ச்சியையும் திடமான ஓர் அறிவூட்டலாகவுமே தரப்படும். இதோஇன்றே உங்கள் கேள்விகளை சூரியன் பதில்கள் " வித்து " மாணவர் சஞ்சிகை என்ற விலாசத்திற்கு அனுப்பி வையுங்கள். தரமான வினாக்கள் விரும்பத்தக்கது.

-சூரியன்-

## மூளைக்கு வேலை



15 தீக்குச்சிகளால் ஒரே அளவான 5 சதுரங்கள் ஆக்கப்பட்டுள்ளன.இதிலிருந்து 3 தீக்குச்சிகளை அகற்றுவதன் மூலம்இதேயளவான 3 சதுரங்கள் பெறப்பட வேண்டும். தீக்குச்சிகள் எஞ்சவோ சதுரங்களின் அளவுகள் மாறவோ கூடாது.

(விடை அடுத்த இதழில்)

மருத்துவம்

## தொப்புளைச்சுற்றி- - - - - - - - - -

-யாழ் வினோத்-

பொதுவாக நாய் கடித்து விட்டால் தொப்புளைச் சுற்றி பதின்நான்கு (14) ஊசிகள் போடுவார்கள் அதற்குக்காரணம் தோலுக்கும் சதைக்கும் இடைப்பட்ட பகுதியில் (Sub-Cutaneous) தடுப்பு மருந்தைச் செலுத்துவதாலேயே ரேபீஸ் வைரசின் வேகத்தைக் கட்டுப்படுத்தி செயலிழக்கச் செய்யமுடியும்.

இப்போது தொப்புளைச்சுற்றி யெல்லாம் ஊசி போட வேண்டிய அவசியமில்லை. கைகளிலேயே போட்டுக் கொள்ளக்கூடிய ஊசி மருந்துகள் மார்க்கெட்டுக்கு வந்து விட்டன.PCERV, HDCV, RABIPUR, VERORAB என்று பல தடுப்பு ஊசி மருந்துகள் விற்பனையில் இருந்தாலும் PCERV மலிவானதும் செல்திறனும் உடைய தடுப்பு மருந்தாகும்.

---

## கவிதை "வித்து"

எச்சரிக்கை..........

பெண்மனது ஒரு மரியானா ஆழி
அதில் விழுந்தவர் மீளவே முடியாது!

-நா.மயூ கரன்-

(கிளி/கனகபுர மகா வித்தியாலயம்)

பார்வை.....................

நான் பார்க்கும் போது அவள் பார்க்கவில்லை
அவள் பார்க்கும் போது நான் பார்க்கவில்லை
அப்படி பார்த்துக்கொண்டால்
பேசுவதற்கு மொழியில்லை
அவள் பணிவாள் என்று நானும்
நான் பணிவேன் என்று அவளும்
காத்திருந்தோம்.
ஆண்டுகள் பல சென்றன.
அவளும் பார்த்தால் நானும் பார்த்தேன்
ஆனால் அவள் கழுத்தில் தாளயுடன்

-தே.கேதீஸ்-

13A. (விஞ்ஞானப் பிரிவு புனித சென் பெனடிற் கல்லூரி, கொழும்பு)

## நான் எனும் போது..........

கண்ணம்மா நான் பாரதியல்ல

செல்லம்மாவிடம் வாழ

கண்ணகியே நான் கோவலன் அல்ல

மாதவியைத் தேட

ஏனெனில் நானென்னும் போது

நீயல்லவா வெளிப்படுகிறாய்.

-நா. நிசஷாந்தன்-

கிளி/கனகபுர மகாவித்தியாலயம்/கிளிநொச்சி.

## முயற்சிக்காதே............. (புதுக்கவிதை)

கொடியைப் பார்

கொடிதரும் மலரைப்பார்

மலரில் இருந்து உருவாகும் கனியைப் பார்

மாறாக வேர் எப்படி இருக்கும் என்று

பார்ப்பதற்கு முயற்சிக்காதே

அதைப்பார்க்க முயன்றால் உன்னால்

கொடியையோ மலரையோ கனியையோ

பார்க்க முடியாது போய்விடும்.

-V.கவிதா-

யாழ்ப்பாணம்

## வாழ்க்கை.....

வாழ்வு மூன்று முத்து

அதில் முதல் முத்து பாலர்

மாற்ற ஒன்று இளமை

இங்குவரும் முடிவு முதுமை.

-கே.வராகினி-

நல்லூர்.

*************

## சுட்டு விரல்

எழுதியவர்- V. நிலவன்

பாரதப்போரில் கர்ணன் உடலெல்லாம் அம்பு தைக்க மரணப்படுக்கையில் கிடக்கிறான். உயிர் பிரியவில்லை. தர்மம் அவனைக் காத்து நிற்கின்றது. அவன் செய்த தர்மத்தை யாசகமாகப் பெற கண்ணன் வருகிறான். அப்போது கர்ணன் " தண்ணீர்" , "தண்ணீர்" என நாவறலப் புலம்புகிறான். நீ எப்போதாவது அன்னதானம் செய்திருக்கிறாயா! என்று கண்ணன் கேட்டான்.

"இல்லை" என்றான் கர்ணன். நன்றாக யோசித்துப்பார் என்றான் கண்ணன். கர்ணன் யோசித்தான். ஒரு முறை ஒரு யாகம் நடந்தது. அது முடிந்ததும் மக்கள் கூட்டம் சாப்பிட விரைந்தது. அந்தப்பக்கமாக போங்கள் என்று சாப்பாடு பரிமாறும் இடத்தை விரலால் சுட்டிக்காட்டினேன் என்றான்.

"அது போதுமே வழி காட்டினாலே புண்ணியம் தான் அந்தவிரலை வாயில் வைத்துக்கொள" என்றான் கண்ணன். கர்ணனும் தன் வலது ஆள்காட்டி விரலை வாயில் வைத்துக் கொண்டான். உடனே அவனது விரலில் இருந்து தண்ணீர் எழுந்தது. அவனது தாகம் தணிந்தது.

கூடவே போய் பிறருக்கு உதவ வேண்டு மென்பது இல்லை. வழிகாட்டினால் கூட போதும் என்பதை இந்தக் கதை விளக்குகின்றது.

*************

# பொது அறிவுப்போட்டி

இப்போட்டியில் மாணவர்கள் மட்டுமே பங்குபற்றலாம். வயதுக்கட்டுப்பாடு எதுவும் கவனத்தில் கொள்ளப் படமாட்டாது. "வித்து" மாணவர் சஞ்சிகையில் பணிபுரியும் அலுவலகர்களோ, அவர்கள் குடும்ப அங்கத்தவர்களோ இப்போட்டியில் கலந்து கொள்ள அனுமதி இல்லை.

இப்போட்டியில் 10 வினாக்கள் தரப்படும் சரியான விடையெழுதும் 3 மாணவர்களுக்கு ரூபா 300 பெறுமதியான பரிசுகள் காத்திருக்கின்றன.

**1ம் பரிசு - ரூபா 150**
**2ம் பரிசு - ரூபா 100**
**3ம் பரிசு - ரூபா 50**

சரியான விடையினை பல மாணவர்கள் எழுதியிருப்பின் குலுக்கல் முறையில் பரிசில்கள் தீர்மானிக்கப்பட்டு வழங்கப்படும். நடுவரின் தீர்ப்பே இறுதியானது. மற்றும் இப்போட்டியில் பங்குபற்றும் அனைத்து மாணவர்களினது பெயர் விபரங்களும் " வித்து " வில் பிரசுரிக்கப்படும். இச்செயற்பாடு ஒவ்வொரு மாணவர்களையும் ஊக்குவிப்பதற்காகவே நீங்கள் செய்ய வேண்டியது. வித்துவின், இறுதிப்பக்கத்தில் உள்ள கூப்பனை பூரணப்படுத்தி உங்கள் விடையுடன் இணைத்து அனுப்பவும். கூப்பன்கள் இல்லாத விடைத்தாள்கள் நிராகரிக்கப்படும்.

"வாழ்த்துக்கள்!" பரிசில்களை வெல்லுங்கள்.

போட்டி முடிவுத்திகதி : 30.06.2002

-இதழாசிரியர்-

**போட்டி இல-01**

1. "ஆத்திசூடி'யை அருளியவர் யார்?
2. இலங்கையின் முதல் ஜனாதிபதி யார்?
3. 2008ம் ஆண்டு ஒலிம்பிக் போட்டி நடைபெறும் நாடு எது?

4. முதன் முதலில் விண்வெளிக்கு அனுப்பப்பட்ட விண்கலத்தின் பெயர் என்ன?
5. இலங்கையின் பாதுகாப்பு அமைச்சர் யார்?
6. இலங்கையின் தேசிய பறவை யாது?
7. இலங்கை சுதந்திரம் அடைந்த ஆண்டு யாது?
8. முதன் முதலில் விண்வெளிக்கு சென்ற மனிதரின் பெயர் என்ன?
9. தற்போதைய அமெரிக்கா ஜனாதிபதி யார்?
10. மனித உடலில் உள்ள நரம்புகள் எத்தனை?

<u>விடைகள் அனுப்பவேண்டிய முகவரி:</u>

**பொது அறிவுப் போட்டி**
**"வித்து"**
**மாணவர் சஞ்சிகை**
**49, முருகேசர் வீதி, நல்லூர்**
**யாழ்ப்பாணம்.**

---

# Microscope



Micro means small. Scope means to view microscope is an instrument which is used for ceisual examination of small objects.

**Simple Microscope**

Simple microscope is nothing move than (a) single magnifing lens this consist of two parts,

1. optical part view
2. Mechanical part whose fumetion is to held the use in the proper way and proper position.

**Compound Microscope**

Compound microscope has is two on more lense system by which we get light magnification the part of the compound microscope is devided in to two

1. Mechanical Part
2. Optical Part

(i) **Mechanical Part**

This have two fumcations

I. To keep the lense systems is Position

II. To had the object being Exam

(ii) **Optical part**

The function of the optical part used magnifing the object high power objective of oil immersion object.

Written by:
**S.P Ketheeswaran**
D.M.L.T
Medical Research

---

## ENGLISH CORNER

இலகுவில் ஆங்கிலம் எழுத, பேச, வாசிக்க விரும்புகிறீர்களா? இதோ " வித்து" உங்களுக்காக வழங்கும் "இங்கிலீஸ் கோனர்"

**பாடம் 1**

**Basic English – அடிப்படை ஆங்கிலம்**

<u>CAPITAL LETTERS</u>

**A B C D E F G H I J**

**K L M N O P Q R S T**

**U V W X Y Z**

<u>SMALL LETTERS</u>

**a b c d e f g h i j**

**k l m n o p q r s t**

**u v w x y z**

Elephant house

## NAMES OF DRINKS

| | | |
|---|---|---|
| (i) Water | (ii) Tea | (iii) Milk |
| (iv) Coffee | (v) Coca | (vi) Soda |
| (vii) Wine | (viii) Whisky | (ix) beer |
| (x) Lemonade | (xi) Alcohol (arrack) | |

## NAMES OF COLOURS

| | | |
|---|---|---|
| (i) Black | (ii) White | (iii) Blue |
| (iv) Red | (v) Yellow | (vi) Pink |
| (vii) Purple | (viii) Orange | (xi) Green |
| (x) Brown | (xi) Gray | (xii) Khaki |

## NAMES OF INSECTS

| | | |
|---|---|---|
| (i) Ant | (ii) Bee | (iii) Butter fly |
| (iv) Louse | (v) Grass | (vi) Hopper |
| (vii) Bug | (viii) Dragon fly | (xi) Mosquito |
| (x) Centipede | (xi) Cock roach | |

Teach By:-

Mrs.A.Ratnasingam.

(To be continued...)

*************

*"வித்து" வின் உளவியல் பகுதி*

# ஒரு டாக்டரின் அனுபவத்திலிருந்து....

**(உண்மைச் சம்பவம்)**

"இவன் எங்களோட ஒரேமகன் டாக்டர்... பேரு பரத் .......... பி.எஸ்.ஸி படிச்சிருக்கான்" பரத்தின் தந்தை,டாக்டர் லிங்கம் அவர்களிடம் மகனை அறிமுகப்படுத்திய போது டாக்டருக்கே ஆச்சரியமாக இருந்தது.

முதல் நாள் அப்பாயின்ட்மெண்ட் கேட்டு பரத்தின் தந்தை போன் செய்தபோதே சொல்லியிருந்தார். "என்மகனுக்கு 25 வயசாறதுங்க....... துணையில்லாம வாசற்ப் பக்கம், கொல்லைப்பக்கம் கூடப் போகமாட்டேங்கிறான். உங்களை வந்து பார்க்கணும்".

"நாளைக்கு அழைச்சுட்டு வாங்க" வந்துவிட்டார்.

மகனைப்பார்த்தால் - 25 வயசு மதிக்கத்தக்கவனாய் இல்லை. முப்பதுக்கு மேல் சொல்லலாம். அதிகம் உழைத்துப்பழக்கமில்லை என்பது உடம்பைப் பார்த்தாலே தெரிந்தது. நிறைய ஊளைச்சதை

கண்களுக்கு- தூக்கம் விழித்ததன் காரணமாய் கறுப்பாய் சதை மடிப்பு

"எங்கே வேலை பார்கறீங்க'

"அதைப்பத்தித்தாங்க முக்கியமா பேசணும் அவனுக்கு தனியார் உத்தியோகம், கவர்மண்டு உத்தியோகம் எதுவுமே பிடிக்கலை சொற் [illegible] டை பிசினஸ் வைத்துக் கொடுத்துப் பார்த்தேன் [illegible] எப்பவும் அவன்

கூடவே இருக்கணும்கிறான்" பரத் குனிந்த தலை நிமிராமல் உட்கார்ந்திருந்தான். டாக்டர் அவனைப்பார்த்து சினேதமாய் சிரிக்கிறார். "மிஸ்டர் பரத் , உங்களோட பிரச்சனை என்னென்று நீங்களே எங்கிட்ட சொல்லலாமே........ அப்பாவைக் கொஞ்சம் வெளியே உக்காரச் சொல்லட்டுமா...." அவ்வளவு தான் அவன், அப்பாவின் சட்டையை இறுக்கமாக பிடித்துக் கொண்டு எழுந்தே விட்டான்.

"அப்பா வாங்க போகலாம்............ எனக்கு பயமா இருக்கு"

"நான் உங்களை ஒண்ணும் செஞ்சிட மாட்டேன் பரத்.............ஜாலியா பேசத்தான் போறோம்........"

"நோ" இவனுடன் தனியே பேசுவது என்பது, அண்ணளவும் முடியாத காரியம் என்று தெரிந்த பின் டாக்டர் அதைப் பொருட்படுத்தாமல் அப்பாவையும் பக்கத்தில் வைத்துக்கொண்டே கேள்வி கேட்கத் தொடங்கினார்.

ஆனால் , அவர் கேட்ட கேள்விகளுக்கு அனேகமாய் அப்பாக்காரரே பதில் சொன்னார்.

பரத், விரல் நகங்களை ஆராய்ந்தபடி சும்மா இருந்தான். இவனை, வழிக்குக் கொண்டு வருவது கொஞ்சம் கடினமான காரியம்...........

பரத்துக்கு சிறுவயதில் இருந்தே தனியே போகப்பயம் இருட்டு என்றால் அலறி அடித்துக்கொண்டு ஓடிவருவான். தவிர விறகு, மரம், கட்டை இவைகளின் அருகிலேயே போக மாட்டானாம்.

ஒரு முறை அடுத்த வீட்டில் துணி கட்டுவதற்காக இழுத்து கொங்கிய கயிற்கைப் பார்த்து விட்டு உடனே ஓடி வந்து விட்டான்.

திடீரென வியர்த்துக் கொட்டும் வீட்டில் யாருடனும் பேசமாட்டான். ஒரு அறைக்குள் புகுந்து கதவை மூடிக்கொள்வான்.

பரத். பெற்றோருக்கு ஒரே குழந்தை. இவன் இப்படி இருப்பது இவனது தாயை மிகவும் பாதித்து விட்டது.

அப்பா மட்டும் தன் மகன் நல்லபடியாக குணமடைய வேண்டுமென்று தினம் ஒரு டாக்டராக அல்லாடுகிறார்.

'நான் ஒண்ணும் வசதியானவன் இல்லீங்க...... ஏதோ சம்பாதிக்கிறது என் சின்னக் குடும்பத்துக்குப் போதும். இப்படி வைத்தியசாலைக்கு பணத்தை தண்ணியா செலவ செய்யற அளவுக்கு......"

டாக்டர் சிரித்தார்

"நீங்க கவலையே படாதீங்க....... நீங்க எதிர்பார்க்கிறதை விட செலவு குறைச்சலாத்தான் ஆகும். நிறையப்பேர் இது மாதிரி நினைச்சுக்கிட்டேதான் வியாதியை வளர்த்துக்குறாங்க.

'இப்படி சொல்லியவர் பரத்தைப் பார்த்துக் கேட்டார்

'உள்ளே தான் பயமாயிருக்கு......... வாங்களேன் அப்படி தோட்டத்துல புட்தரையில் உட்கார்ந்து பேசலாம்"

அரைமனசுடன் சம்மதித்த பரத். அப்பாவின் கையை விடாமல் பிடித்தபடி எழுந்து வந்தான்.

வெளியே வந்து உட்கார்ந்தான். தன் எதிரில் இருந்த மரத்தை சிறிது நேரம் உற்றுப்பார்த்தான். முகத்தில் முத்து முத்தாய் வியர்வை..........

"என்ன பரத்........." "அந்த மரத்தைப்பார்த்து பயமா இல்லே........" "இல்லே......... சாதாரணமா இது மாதிரி மரங்களில்தான் பேய் இருக்கும்."

டாக்டருக்கு ஒரு வாறு இவனது உணர்ச்சிகள் புரிகிறது. இவனைப் பல விதமான பயங்கள் ஆட்டிப் படைக்கின்றன. அந்தச்சமயங்களில் இதயப்படபடப்பு இரத்த அழுத்தம் அதிகமாவது தூக்கமின்மை, அதிகவியர்வை இத்தனை தொந்தரவும் ஏற்படுகின்றது. தவிர• சிலநாள் மலச்சிக்கல்....... சிலநாள் வயிற்றுப் போக்கு..... பசியே இல்லாத மந்தத்தனம்...... ஆக இவனுக்கு ஒரு டாக்டர் போதாது.......

உடல் ரீதியாக ஒரு ஜெனரல் டாக்டரும் உடம்பினுள்ள இரசாயன மாறுதல்களைச் சரிசெய்ய ஒரு சைக்காட் டிரிஸ்டும் தேவை.

டாக்டர் லிங்கம் அவர்களைச் சந்திக்க ஏற்பாடு செய்கிறார்.

ஒரு மருத்துவக் குழுவே இணைந்து பரத்தின் மனசில அழுத்தி வைக்கப்பட்டிருக்கும் பயங்கரங்களை தோண்டி எடுத்தார்கள்.

பத்து வயது வரையில் பரத்•அந்த வயசு குழந்தைக்குரிய சுறுசுறுப்போடு தான் இருந்தான்.

"10" வயதில் தான் அந்த சம்பவம் நடந்தது.

பரத்தின் அம்மாவுக்கு தூரத்து உறவினன் சகாதேவன் தூரத்து உறவாக இருந்தாலும் அடிக்கடி வீட்டுக்கு வந்து பார்த்து அவர்கள் வீட்டு விஷேசம் எல்லாம் பங்கு கொண்டு ரெம்பவும் நெருங்கியவனாக இருந்தான் சகாதேவன் பரத்துக்கு கூட சகா மாமாவை ரெம்பப் பிடிக்கும்

சமீபத்தில் தான் சகாவுக்கு கல்யாணமாயிற்று. சுவாமி மலையில் பரத் குடும்பத்தோடு போய் வந்தான்

கல்யாணம் நடந்து ஒரு மாதத்துக்குள் சகா இறந்து விட்டதாக டிரங்கால் வந்த போது

பரத்தின் தாய் தந்தை இருவருமே பதறி விட்டனர்

என்ன பேச்சு

தற்கொலையாம்.பரத்தின் அப்பா சொன்னார் பரத் அவரையே இமைக்காமல் பார்த்துக்கொண்டிருந்தான்.

தற்கொலைன்னா என்ன?

இவனது சந்தேகத்துக்கு விடை போல கடைசியாய் சகா பரத்தின் பெற்றோருக்கு எழுதிய கடிதம்.

"எனக்கும் என் மனைவிக்கும் ஒத்துப்போகவில்லை. அதனால் என்னை நானே மாய்த்துக் கொள்ள தீர்மானித்து விட்டேன். இந்தக் கடிதம் உங்களுக்கு கிடைக்கும் போது நான் உயிருடன் இருக்கமாட்டேன். நான் செத்த பிறவாவது என் மனைவி சந்தோஷமாய் இருந்தால் சரி."

இதைப் படித்து விட்டு பரத்தின் தாய் வாயிலும் வயித்திலும் அடித்துக் கொண்டு அழுதாள்.

" கடங்காரன்....... இப்படிப் பண்ணிட்டானே"

தற்கொலை செஞ்சிட்டா மட்டும் நிம்மதி கிடைக்குமா? ஆவியா அலைய மாட்டானா? பிசாசா அலையவா இவனை இவங்கம்மா பெத்தாங்க. சாதாரணமா இருக்கிறதானா இவன்60,70 வயது வரை இருக்கமாட்டானா? இப்ப 25 இலேயே செத்து இவனும் வாழாம பிறத்தியாரையும் வாழ்விடாம செய்வானா?

"இதற்குப்பின் நிறைய விஷயங்கள் [illegible]

சகாவின் சாவுக்கு காரணமான அவன் மனைவி அதிக நாள் வாழவில்லை.

ஆறாம் மாதம் ஆற்றில் குளிக்க போய் இறந்தாள்.

"அவளுக்கு என்ன நீச்சல் தெரியாதா?" ஆத்தங்கரையிலே பொறந்த பொண்ணு. என்னிக்கும்இல்லாதத் திரு நாளா — நிந்தறப்ப வலிப்பு வருவானேன். ஆத்தோடப் போவானேன்? சகாவை எத்தனை வதைச்சிருப்பாள்? இவளோட ஆவி சும்மா விடுமா......பழிவாங்கறது இன்னும் எத்தனை பேர் பலியோ, பரத் நடுநடுங்கினான், கண்களை மூடினால் சகா வந்து நின்றான். சகாவுக்கும் பரத்துக்கும் நிறைய வயசு வித்தியாசம் இருந்தாலும் சகா பரத்துக்கு விளையாட்டுத் தோழனாய் இருந்திருக்கிறான். பரத் அழுகுனி ஆட்டம் ஆடிய போதெல்லாம் சகா சிரித்தபடி சொல்லியிருக்கிறான்.

"டேய் படவா இரு இரு உன்னை பின்னாலே கவனிச்சுக்கிறேன். " ஆமா போ நேரே நிக்கிறப்பவே ஒன்னாலே ஒன்னும் பண்ணமுடியாது பின்னால தான் கவனிக்கப் போறியாக்கும். உன்னாலே என்னை என்ன பண்ண முடியும்.

"அப்படியே குறவளைய நெருக்க முடியும் படவா ராஸ்கல் இரு இதோ வந்திர்றேன். ஒரு காலத்தில் விளையாட்டுக்காய் பேசிய பேச்செல்லாம் விசுவரூபமெடுத்தது எப்படியும் சகா என்னை பழிவாங்காமல் விடமாட்டான் என்று திடமாய் நம்பினான் பரத்.

இவனது நம்பிக்கையை வலுவூட்டுவது போல சகாதேவனின் மாமனார் ஏதோ அரசன் கட்[illegible] காரணமாய் விறகு கட்டையால் அடிக்[illegible]பட்டார்.

ஆள் துயில் சிகிச்சையின் மூலம் இத்தனையும் அறிந்த டாக்டர் பரத்தின் பயங்களை கொஞ்சம் கொஞ்சமாக நீக்கும் முயற்சிகளில் ஈடுபட்டார்.

முதலில் பேய்ப்பயம், இரண்டாவதாக சகாவைப்போன்ற நல்லவர்கள் அற்பவிசயத்துக்காக எல்லாம் பழிவாங்க பேயாய் அலைய மாட்டார்கள். என்கின்ற விளக்கம்.

தண்ணீரில் நீந்துபவர்களுக்கு இது போல ஸ்டிரோக் வருவது சகஜம் என்றும் அந்த சமயங்களில் தண்ணீரை எதிர்த்து மேலே வர முயற்சிக்கையில் மூக்கிலும் வாயிலும் தண்ணீர் புகுந்து மரணம் ஏற்படுவது சகஜம் என்றும் சகாவின் மனைவி அப்படித்தான் இறந்தாள் என்றும் சொன்னார்.

சகாவின் மாமனாரைப்போல் எத்தனை அரசியல் வாதிகள் பூசலில் கொல்லப்பட்டிருக்கிறார்கள்.

அவர்களுடைய மருமகள்கள் எல்லாம் தற்கொலை செய்து கொண்டு பேயாகவா அலைகிறார்கள் இல்லையே!

அப்படி அடுக்கடுக்காய் நடைமுறை சாத்தியங்களை இவனுள் விதைத்ததன் விளைவு.

பரத் இப்பொழுது மரக்கடை வைத்திருக்கிறான்

(அடுத்த இதழில் இன்னுமொரு சுவாரசியம் தவறாமல் படியுங்கள்)

நன்றி

("உறங்கும் நினைவுகள்")

தருவது

மாஸ்டர்

*************

# கணிதம் 9,10,(O/L)

தயாரிப்பு – S.PVinoth –
(யாழ்/கொழும்பு பிரபல ஆசிரியர்)

## சமன்பாடுகளைத் தீர்த்தல்

1. எளிய சமன் பாடுகள்

ஒரு தெரிய கணியம் கொண்ட சமன்பாடுகள் எளிய சமன்பாடுகள் எனப்படும்.

**உதாரணம்-1**

3x-4=x(இது எளிய சமன்பாட்டின் ஒரு வடிவம்)முதலில் தெரியாக் கணியங்களை ஒரு பக்கமும் எண்களை ஒரு பக்கமும் கொண்டு செல்லுதல் வேண்டும். இதன்படி

$3x-4=x$

$3x-x=+4$

பின்சமன்பாட்டைத் தீர்ப்போம்

$3x-4=x$

$3x-x=4$

$2x=4$

$x=4/2$

$\therefore x=2$

**உதாரணம்-2**

$10x-10=5x$

$10x-5x=10$

$5x=10$

$\therefore x=2$

**உதாரணம்-3**

$x+3=4x$

இங்கு தெரியாக் கணியங்களை எப்பக்கம் கொண்டு செல்வதென்ற விளக்கம் தெளிவாக வேண்டும்.

அதாவது தெரியாக் கணியங்கள் மறைப்(-) பெறுமானத்தைக் கொண்டிருக்கக் கூடாது. எனவே $x+3=4x$ (3ஐ எங்கும் கொண்டு செல்லத் தேவையில்லை)

$3=4x-x$

இப்பொழுது சமன்பாட்டைத் தீர்ப்போம்

$x+3=4x$

$3=4x-x$

$3=3x$

$3/3=x$ (இங்கு "∴"என்ற குறியீட்டு xஉடம் 1உடம் மாறும் போது அடையாளம் மாற்றமடையவில்லை.)

$1=x$

$\therefore x=1$

உதாரணம்-4

$7x+6=10x$

$6=10x-7x$

$6=3x$

$2=x$

$\therefore x=2$

$6/3=x$

உதாரணம்-5

$11x-10=-3x$

$11x+3x=10$

$14x=10$

$x=10/14$

$x=5/7$

(பிரிக்கமுடியாவிட்டால் அப்படியே விடையளிக்க)

| பயிற்சி | விடைகள் |
| --- | --- |
| 1. $10x+4=24$ | I. $x=2$ |
| 2. $a+a+3=3a$ | II. $a=3$ |
| 3. $7y+3=10y$ | III. $y=1$ |
| 4. $11q=6q+5$ | IV. $q=5$ |
| 5. $12B+4B=2+14B$ | V. $B=1$ |
| 6. $6x+10=x$ | VI. $x=(-2)$ |
| 7. $3q-4=-q$ | VII. $q=(-1)$ |
| 8. $8p-3=6-p$ | VIII. $p=1$ |
| 9. $7m=4=4m+7$ | IX. $m=1$ |
| 10. $6n-5=5n-6$ | X. $N=(-1)$ |
| 11. $20z+10=10z+20$ | XI. $z=1$ |
| 12. $11R+10=10R+11$ | XII. $R=1$ |

(தொடரும்.....)

ஆரம்ப அறிவில் இருந்து படிப்படியாக கற்பிக்கப்படும்.

என்றென்றும் உங்கள் ஆசிரியர்

S.P.வினோத்

---

சோகம் கலந்த விறு விறு தொடர்.....

அடுத்த இதழில்....
உங்களின்
எழுத்தாளர்

S.A. சந்திரன்
எழுதும்

ரசு விழது

# VIROLOGY


## PART (1)
## GENERAL PROPERTIES OF VIRLSES

Written by
S.P.KETHEESWARAN D.M.L.T
(MEDICAL RESEARCH)

### Difinition

Viruses are the smallest obligate intracelular infectious agents(20-400 mm in diameter) Containing only one type of nueleic acid either RNA as their genome. The gename ( nucleic acid) is encased in a shell of proteins called capsid which may have a Surrounding lipid-containing membrane (envelope) The entire unit is called virion

A B




a) Enveloped virus with icsahedral symmetry.

b) Virus with helicalSymmetry.

Viruses are metabclically inert cutside the living cells. They replicate only in living cells and their genome (ncleic acid) diverts the cells metatoliam to the synthesis of a nuber of virus specific macromolecules required for the Prodectic [illegible] ogeny.

The viruses differ from bacteria in that they are:-

I. Much smaller

II. lack the enzymes necessary for synthesis of protein and nocteic acid.

III. Do not have cellular organisation or ribosones.

IV. Donot divide by binary pission or grow in inanimate media

V. Possess only one kind of nucleic acid and

VI. Are resistant to antibiotics

(Table1.1)

**Table 1.1 Distinguishing featuresof prakeryotes and viruses**

| Properfies | Bacteria | myco plasma | Rick ettsiae | chlam ydiae | viruses |
|---|---|---|---|---|---|
| Cell-way | + | + | + | + | - |
| Muramic acid in cell-wall | + | + | + | + | - |
| Ribsomes & Cellular enzymes | + | + | + | + | - |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| DNA,RNA | Both | Both | Both | Both | Only one kind |
| Division by binary fission | Yes | Yes | Yes | Yes | No |
| Growth in inanimate medicm | + | + | + | - | - |
| Sensitivity to antibacterial agents | + | + | + | + | - |
| Sensitivity to interferon | - | - | - | + | + |

The origin of virus is not know one hypothesis is that viruses are genes of host cells that have acquired the capacity to exist independent of the cell. Accodingto another hypothesis they evolved from living cells like blcteria.

**Host specificty**

On the basis of host specificily, viruses fall into four main groups.

1. Animal viruses(mammalian),
2. Plant viruses,
3. Insect (invertebrate) viruses
4. Bacterial Viruses (bacteriophages)

This distinction is not absoluts as arboviruses (Invertehrate viruses) infectman. plant viruses are not known to cause infections in man but bacteriophages are indirectly responsible for human infections eg. lysogenic C.diphtheriae having temperate bacteriophage causes diphtheria in man.



# உபநிடதங்கள் ஓர் அறிமுகம்

- சு.லோகதர்சினி -
(2ம் வருடம், கலைப்பீடம்,
யாழ்பல்கலைக்கழகம்.)

தொன்மையான மதமாகிய இந்து சமயத்தில் பிரஸ்தானத்திரயம் என அழைக்கப்படும் நூல்கள் மூன்றாகும். பிரஸ்தான திரயம் என்பதன் பொருள் பிரதானமானவை மூன்று என்பதாகும். அவையாவன உபநிடதம் பகவத்கீதை, பிரம்மசூத்திரம் என்பனவாகும். இத்தகைய சிறப்புடைய உபநிடதம் பற்றி நோக்குவோமானால் உபநிடதம் என்பதனை உப+நி+ஷத் எனப்பிரித்து பொருள் கூற முடியும் இதன் முழுமையான பொருளைப் பார்த்தால் பக்குவப்பட்ட சீடன் குருவிற்கு அருகில் இருந்து மெய்ப்பொருளைக் கேட்டுத் தெளிதல் எனப் பொருள்படும். உபநிடதங்கள் பற்றி பலரும் பலவாறு அவற்றின் எண்ணிக்கையைக் கூறியுள்ளனர். 207 என்று 150 என்றும் 108 என்றும் பலவாக இதன் எண்ணிக்கை கூறப்படுகின்றது. முத்திக்கோபநிடதம் இதன் எண்ணிக்கையை 108 என்று கூறியுள்ளது. எனினும் 12 உபநிடதங்கள் சிறப்புடையவனவையாகும். இவற்றுள் சங்கரரால் உரை எழுதப்பட்டது 10 உபநிடதங்களாகும். அவை தசோபநிடதங்கள் என அழைக்கப்படும். சிறப்புக்குரிய உபநிடதங்களாக பின்வருவன கூறப்படுகின்றன. அவையாவன *ஈச உபநிடதம், கேன உபநிடதம், கட உபநிடதம், முண்டக உபநிடதம் மாண்டூக்ய உபநிடதம், சாந்தோக்கிய உபநிடதம், பிரசின்ன உபநிடதம், ஐதரேய உபநிடதம், கௌசிதகி உபநிடதம், சுவேதாஸ்வர உபநிடதம் என்பனவாகும்.*

இவ்வாறு சிறப்புடன் கூறப்படும் உபநிடதங்கள் பின்வருவனவற்றை அளவைப் பிரமாணங்களாகக் கொள்கின்றன. அவையாவன. *பிரத்தியட்சப் பிரமாணம், அனுமானப் பிரமாணம், ஆப்தவாக்யப் பிரமாணம்* என்பன. இவற்றின் ஊடாக பிரபஞ்சம், ஆன்மா, பிரமம் என்பன நிறுவப்படுகின்றன. இத்தகைய உபநிடதங்கள் பல தத்துவக் கருத்துக்களைக் கூறுகின்றது. இந்த தத்துவ ஆராட்சியானது பல்வேறு நிலையில் காணப்படுகின்றது. குரு சீடனுக்கு கூறும் அறிவுரையாகவும், கணவன் மனைவிக்கு கூறும் தத்துவ உண்மையாகும். இறைவன் ஆன்மாவுக்கு கூறும் அருள் உபதேசமாகவும் மேலும் பலவாறாகவும் அமைகின்றது. உபநிடதங்களிலே பல குருசீட உறவுகளைக் காணமுடிகின்றது. அவற்றுள்சில. i *யாக்யவல்கியர் - மைத்திரேயி* உறவு. இது கணவன் மனைவி உறவு ii *சுவேதகேது - உத்தாலகர்* உறவு இது மகன் தந்தை உறவு iii *யமன் - நசிகேது* உறவு. இது இறைவன் ஆண்மாவிற்கு இடையிலான உறவு. இவ்வாறாக பல உறவுகளை உடையதாக உபநிடத தத்துவ ஆராய்ச்சி இடம் பெற்றுள்ளது.

உபநிடதங்கள் தமது ஆய்வில் பிரமம், ஆன்மா, பிரபஞ்சம், கன்மம் மறுபிறப்பு, முத்தி, விரதம், அறம், ஒழுக்கம் போன்ற இன்னோரன்ன விடயங்களை ஆய்வு செய்துள்ளது. உலகம் உய்ய ஞான ஒளியேற்றி ஞான சந்நியாசி சுவாமி விவேகானந்தர் "உபநிடதங்கள் அளவற்ற பலத்தைக் கொடுக்கும் சுரங்கங்களே. அகில உலகையும் அரவணைக்கும் சக்தி [illegible]த்தில்

ஒலிக்கின்றது. உபநிடதங்கள் புற்றுயிரும், புற்றுணர்ச்சியும், புதுச்சக்தியும் தரவல்லன. எல்லா மதங்களிலிருக்கும் பலவீனங்களையும் தாழ்த்தப்பட்டவர்களையும், *துண்டித்தல் அழுந்தியவர்களையும்* அறைகூவி அழைத்து ஆண்மையுடன் எழுந்து நில்லுங்கள் விடுதலை அடையுங்கள் என்று நாளிலம் கேட்க உரக்கக் கூறுகின்றனர். உடல், உள்ளம், ஆன்மா கவர்நில பூரண சுதந்திரம். இதுவே உபநிடத்தின் பெருமையை உலகிற்கு எடுத்தக் கூறியுள்ளார்.

இத்தகைய உபநிடதங்கள் வேதத்தின் அந்தமாக, அதாவது வேதாந்தமாகக் கொள்ளப்படுகின்றது. வேதத்தில் கூறப்பட்ட கருத்துக்களை ஆணித்தரமாக எடுத்துரைப்பவை உபநிடதங்கள் என்னும் வகையில் இப்பெயர் சுட்டப்பட்டிருக்கலாம். அது மாத்திரமல்லாது வேதத்தின் மணிமுடியாக. வேதசிரசாக உபநிடதங்கள் விளங்குகின்றன. உபநிடதங்களின் பயன்பாட்டில் குறிப்பிட்டுக் கூறகக்கூடியது எதுவென்றால் இந்து தத்துவங்களுக்கு மாத்திரமல்லாமல் இந்திய தத்துவங்களுக்கும் உபநிடதங்களே ஆதாரமாய் அமைந்துள்ளன. குறிப்பாகக் கூறினால் பிற்கால தத்துவ வளர்ச்சிக்கும், எழுச்சிக்கும் உபநிடதங்களே கருவூலமாய் அமைந்துள்ளன என்றால் மிகையாகாது.

******************

**வித்துவின் வித்தகர்களே!....................**

வித்து இன்று உங்கள் கைகளில் முளை விடத்தொடங்கியுள்ளது. வித்துவின் வளர்ச்சிக்கு மாணவர்களாகிய உங்களின் அறிவூற்றே மிகமிக அவசியமாகின்றது.

எனவே உங்களது ஆக்கங்களை உங்களது எண்ணத்தில் தோன்றுவனவற்றை எமக்கு எழுதியனுப்ப மறவாதீர்கள்

♣ கவிதை ♣ சிறுகதை ♣ தொடர்கதை

♣ விஞ்ஞான விளக்கங்கள்

♣ உண்மைச் சம்பவங்கள் ♣ கட்டுரைகள்

♣ ஓவியங்கள் ♣ பொதுஅறிவுத்துணுக்குகள்
மற்றும் சிறுவர் பகுதிக்கான (மழலை வித்து)

♣ கைவண்ணங்கள் ♣ எனது பாடசாலை

♣ சிறுகதைகள் ♣ தெரிந்து கொள்பவை

இப்படிப்பட்ட ஆக்கங்களையும், மற்றும் பாடங்கள் சம்பந்தமான சகல ஆக்கங்களையும் வித்துவுக்கு எழுதியனுப்புங்கள். தரமான ஆக்கங்கள் தாமதமின்றி வித்துவின் தொடர் முளைவிடும் இதழுக்காக பிரசுரிக்கப்படும்.

இது வித்துவின் முதல் முளை. அடுத்தடுத்த இதழ்களில் இன்னும்பல சுவையான அம்சங்களும், உங்களின் சுவையான ஆக்கங்களும் சேர்க்கப்படவுள்ளன. சிறந்த ஆக்கங்களிற்கு பரிசுகளும் பாராட்டுக்களும் உண்டு. எனவே ஆக்கங்களை அனுப்பி பரிசில்களை வெல்லுங்கள்.

உங்கள் வித்துவின் வளர்ச்சிக்கு மாணவர்களாகிய நீங்கள் அறிவுநீரை ஊற்றுவீர்கள் என்ற நம்பிக்கையுடன்

என்றென்றும் உங்களுடன்

ஆசிரியர்

# எலைட் கல்வி நிலையம்

கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

## ஆண்டு 06 முதல் A/L வரை

சகல வகுப்புக்களும் யாழ் நகரின் முன்னணி ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த சேவையில் மிகவும் சிறப்பாக நடை பெறுகின்றது.



Printed By:

**Mobile@net Computer Services**

324, palaly Road, Jaffna.

# சாரங்கா நகை மாடம்

**177/4, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்**

நவீன டிசைன்களில் அழகிய தங்க
நகைகளை 22 கரட் தங்கத்தில்
ஓடருக்கு குறித்த தவணையில்
செய்து பெற்றிட
நம்பிக்கையான ஸ்தாபனம்

**இன்றே உங்கள் தெரிவுகளுக்கு**

# சாரங்கா நகை மாடம்

யாழ் மண்ணில் சிறந்த இளங் கலைஞர்களின்
ஒன்றிணைப்பில் மலர்ந்து மணம் வீசிக் கொண்டிருக்கும்.

# ஜங்கரன் இசைக்குழுவின்

# வசந்த ராகங்கள்

என்றென்றும் யாழ் மண்ணில் மங்கா புகழ்
பெற்ற ஜங்கரனின் வசந்தராகங்கள் இசை நிகழ்ச்சியை
பதிவு செய்ய நாடுங்கள்

தொடர்புகளுக்கு: -

இல 74 மணிக்கூட்டு வீதி.
யாழ்ப்பாணம்.

## உரிமையாளர் - வீஸ்மன்

[illegible] புக் பைண்டிங் சென்ரர் 43, பலாலி வீதி, கந்தர்மடம்.